**மார்ச் - 9**

**"உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரவல்லவே"**

**- எபி 6 : 10**

ஒவ்வொரு நாளும் ராஜகொடியை தானே உயர்த்த நாடாமலும், அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை பகிரங்கமாக அறிவிக்காமலோ அல்லது பொது ஜன ஊழியத்திற்காகக் கர்த்தர் தமது பராமரிப்பில் அதிக அனுகூலமான அந்தஸ்துக்களில் வைத்திருக்கிற மற்றவர்களுக்கு உதவி செய்யாமலும் அவர்களோடு ஒத்துழையாமலும் ஊழியத்திற்கும் ஒத்துழைப்புக்குமுள்ள பொன் போன்ற சந்தர்ப்பங்களை கொண்ட தற்போதுள்ள அறுவடை சமயத்தின் நாட்கள் கடந்து செல்வதை அனுமதிக்க கர்த்தரின் எந்த பிள்ளையும் திருப்திக் கொள்ளக் கூடாது.

**-Z ’03, 59 (R 3152).**

கிறிஸ்து சாயலில் ஒருவருக்கொருவர் அபிவிருத்தியடைவதற்கும் பூரணமடைவதற்கும், அன்பிலிருந்து வழிந்தோடுகிறதும், பரிசுத்தவான்கள் செய்கிறதுமான வேலையும் பிரயாசமும் முதன்மையான அவருடைய நாமத்துக்கும் தேவனுடைய மகிமைக்கும் காண்பிக்கப்பட வேண்டும். ஆச்சரியமான கருத்து அப்படிப்பட்ட அன்பின் வேலையையும் பிரயாசையையும் தேவன் உயர்வாக மதித்து சொந்தம் கொண்டாடுகிறார். இவ்விதமாக அவருடைய நீதி அதை மறப்பதிலிருந்து தடுக்கிறது.

**-P ’33, 46.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

நீதி 14:31; 22:9; 28:27; 31:20; மத் 10:40-42; 18:5,6; அப் 11:29; 24:17; ரோம 12:13; 15:25,26; 2கொரி 8:9; 1தெச 1:3,6,7; 2தீமோ 1:18.

**கோபுர வாசிப்பு** : Z ’15, 380(R 5818).

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்து அனுபவம் என்ன? அவை எவ்வாறு அனுபவிக்கப்பட்டன? அவற்றின் பலன் என்ன?

www.Divineplan.in